The Hindu (English)
Dated: 09.07.2024

# Campaigning for Vikravandi byelection draws to a close

**The Hindu Bureau**
VILLUPURAM



**Poll pitch:** Minister Udhayanidhi Stalin campaigning for DMK candidate Anniyur Siva on Monday. S.S. KUMAR

The curtains came down on the month-long campaign in the Vikravandi Assembly constituency in Villupuram district on Monday, ahead of the byelection on July 10. Key leaders of the DMK, PMK and NTK went on a whirlwind tour of the constituency, trading barbs, charges and counter-charges.

The DMK deputed a battery of Ministers, MLAs and MPs to the constituency, while the PMK tried its best to engage all alliance leaders of the NDA in the campaign.

The DMK's campaign was centred on the implementation of welfare schemes over the last three years, while the PMK focused on the alleged failures of the DMK on the law and order front, especially the hooch tragedy, and its delay in providing 10.5% internal reservation for Vanniyars and conducting a caste census.

While the DMK's campaign was led by Youth Welfare and Sports Development Minister Udhayanidhi Stalin, the PMK's campaign was led by its founder S. Ramadoss and his son and party president Anbumani Ramadoss.

Mr. Udhayanidhi campaigned for the second day from Thumbur and visited Nemur and Radhapuram before ending his campaign in Vikravandi. He appealed to the voters to ensure the victory of the DMK candidate by a margin of 1 lakh votes to continue the good work done by former MLA N. Pugazhenthi.

Canvassing votes for PMK candidate C. Anbumani at Soorapattu, party president Anbumani Ramadoss asked voters "not to waste their vote on the DMK" as the party lacked a roadmap for the development of the State.

The NTK's Seeman held rallies at Orathur and Vikravandi, campaigning for party candidate Abinaya.

The Hindu (English)
Dated: 09.07.2024

# Campaigning concludes for tomorrow's Assembly bypolls in 13 constituencies

**The Hindu Bureau**
NEW DELHI

**The seats are spread across seven States; votes will be counted on July 13**

Campaigning ended on Monday for the Assembly byelections to be held on Wednesday in 13 constituencies across seven States – Bihar, West Bengal, Tamil Nadu, Madhya Pradesh, Uttarakhand, Punjab, and Himachal Pradesh.

The byelections will be keenly watched, especially in Himachal Pradesh, where polling will be held for the Dehra, Hamirpur, and Nalagarh seats, vacated by Independent MLAs who joined the BJP.

Though the Congress has crossed the majority mark of 35 seats in the Assembly by winning four of the six seats in the byelections held simultaneously with the Lok Sabha election, the BJP is hoping for a windfall in these three.

In Dehra, Kamlesh Thakur, the Congress candidate and wife of Himachal Pradesh Chief Minister Sukhvinder Singh Sukhu, is contesting against the BJP's Hoshiyar Singh, one of the three Independents who switched sides from the Congress.

The Vikravandi Assembly constituency in Tamil Nadu saw key leaders of the DMK, the PMK and the Naam Tamilar Katchi (NTK) hit the campaign trail trading barbs, charges and counter-charges. The DMK campaign mainly centred on the implementation of welfare schemes over the past three years, while the PMK focused on the failures of the DMK on the law and order front, especially the recent hooch tragedy, and its delay in conducting a caste-wise census in the State.

In West Bengal, bypolls were necessitated in three of the four seats after the BJP MLAs switched sides to the Trinamool Congress. It remains to be seen whether the BJP is able to retain the Raiganj, Ranaghat Dakshin and Bagda seats.

The fourth seat, Maniktala, fell vacant with the death of Trinamool MLA Sadhan Pande. His wife, Supti Pande has been fielded by the Trinamool.

In Punjab, the Jalandhar West Assembly seat fell vacant after Sheetal Angural resigned as the Aam Aadmi Party (AAP) legislator and joined the BJP.

In Bihar's Rupauli, Independent MP Rajesh Ranjan, alias Pappu Yadav, announced "full support" to RJD candidate Bima Bharti whom he had defeated in the Lok Sabha election.

Counting will take place on July 13.

The Hindu (English)
Dated: 09.07.2024

# PMK complains of cash distribution to voters in Vikravandi

**The Hindu Bureau**
VILLUPURAM

The PMK on Monday submitted a complaint to Vikravandi Returning Officer M. Chandrasekhar alleging distribution of cash to voters by the ruling DMK ahead of the byelection.

PMK spokesperson K. Balu alleged that the DMK had been distributing cash to voters for the past few days. Though complaints were submitted to the Returning Officer a week ago, no action was taken, he said.

The DMK had distributed ₹1,000 per vote to all voters in the constituency, totalling ₹23 crore in the first phase, he claimed.

However, the Returning Officer said that he had not received any such information so far.

Mr Balu alleged that Ministers and elected representatives of the ruling party had started distributing the second instalment of ₹1,000 to voters, fearing a defeat in the byelection. Cash to the tune of over ₹50 crore had been distributed to voters, he alleged

The PMK alleged that the DMK transported residents from villages across the constituency and confined them at various places during Minister for Youth Welfare and Sports Development Udhayanidhi Stalin's visit to Vikravandi on Sunday. They were given ₹500 per vote, he alleged.

The DMK candidate's election expenses had exceeded ₹5 crore, breaching the limits set by the Election Commission of India. The DMK candidate should be disqualified and the election may also be countermanded as the process had been seriously vitiated, Mr. Balu said.

The Hindu (English)
Dated: 09.07.2024

# EC allows Sharad Pawar's party to accept donations from public

**The Hindu Bureau**
NEW DELHI

The Election Commission has accepted a request by the Nationalist Congress Party-Sharadchandra Pawar (NCP-SP) to allow it to accept voluntary contributions from the public in view of the Assembly election in Maharashtra.

The Sharad Pawar-led party had requested the commission to issue a communication or certificate recording the status of the party for the purpose of accepting voluntary contributions.

The EC, in its communication to the party on Monday, authorised it "to accept any amount of contribution voluntarily offered to it by any person or company other than a government company" in compliance with Sections 29 B and 29 C of the Representation of the People Act, 1951, which govern the contribution to all parties.

An eight-member delegation of the NCP-SP led by its working president Supriya Sule met the commission earlier here.

The NCP split in July last year after Ajit Pawar and eight other MLAs joined the Eknath Shinde government. The EC gave the party name and 'clock' symbol to the Ajit faction, while the Sharad group was allotted the symbol of 'man blowing turha'.

The Times Of India
Dated: 09.07.2024

# Polling tomorrow as heated campaign in Vikravandi ends

## 29 Candidates In The Fray; DMK, PMK Main Contenders

TIMES NEWS NETWORK

TOI





**FEVER PITCH:** Sports minister Udhayanidhi Stalin campaigns for DMK's Anniyur Siva, and PMK president Anbumani Ramadoss seeks votes for the party's C Anbumani, in Vikravandi on Monday

**Villupuram:** On the last day of electioneering on Monday for the Vikravandi bypoll, chief minister M K Stalin appealed to the electorate to vote for DMK. The bypoll will be held on July 10. Earlier, he had released a video urging the people to teach a befitting lesson to the parties that betray social justice.

In a statement issued on Monday, Stalin, who did not visit Vikravandi to campaign, listed out the achievements of the DMK govt in the constituency in the three years since assuming power. Aiming to woo the vanniyar voters in their stronghold constituency, Stalin said the govt proposed to construct a memorial at ₹5.7 crore in Villupuram for 21 people who lost their lives in police firing during a protest demanding reservation for backward classes in 1987.

Similarly, the govt proposed to construct a manimandapam at an estimated cost of ₹4 crore for A Govindasamy, the late vanniyar leader and agriculture minister in the cabinet of chief ministers Annadurai and M Karunanidhi, he said.

Though 29 candidates are in the fray, the real fight is between DMK and PMK. The constituency witnessed intense campaigns by DMK, PMK and NTK functionaries. More than a dozen DMK ministers and scores of party functionaries from various districts camped here to ensure the party's victory.

The bypoll is seen as a test for the ruling party after the Kallakurichi hooch tragedy, which claimed 65 lives, including six women, and left more than 150 hospitalised. The votes will be counted on July 13 and the results will be declared the same day. The seat fell vacant after DMK MLA N Pugazhenthi, 69, passed away in April after a prolonged illness.

Meanwhile, Puducherry deputy commissioner (excise) M Mathew Francis in a circular said all bars, restaurants and hotels serving liquor, arrack and toddy shops in Mannadipet commune along the Puducherry-Tamil Nadu border must remain closed from July 8 to 10 on account of the Vikravandi bypoll. The shops must remain closed on the counting day too, he said in the release.

Deccan Chronicle
Dated: 09.07.2024

# CAMPAIGN ENDS FOR VIKRAVANDI BYPOLL; AIADMK VOTES IN FOCUS

G. BABU JAYAKUMAR, D. SEKAR | DC
CHENNAI, JULY 8

The 20-day high voltage campaign for the July 10 by-election to the Vikravandi Assembly seat in Villupuram district came to an end on Monday evening with top leaders of all the three major parties in race, the ruling DMK, the PMK and the Naam Tamizhar Katchi, going around the constituency seeking the support of the people raising different issues.

Officials swung into action to ensure that outsiders left the constituency, where polling will take place from 7 am to 6 pm on Wednesday when the fate of 29 candidates in the fray will be decided by the 2,34,624 strong electorate, and no campaign related work was carried out after the deadline.


Youth affairs minister Udhayanidhi Stalin, PMK president Anbumani Ramadoss and NTK chief coordinator were in the field canvassing votes for their candidates, Anniyur Siva, C Anbumani and Abinaya, respectively, who are key contestants among the list of 29 candidates.

While the DMK was highlighting its achievements in the past three years.

Dt Next, Dated: 09.07.2024

# Curtains on Vikravandi bypoll campaign

**CHENNAI: Electioneering for the July 10 Vikravandi assembly bypoll came to an end at 6 pm on Monday. As the ruling DMK went full throttle to retain the seat and maintain its winning streak under Chief Minister MK Stalin, the PMK and the NTK hit the ground hard to give the Dravidian major a tough fight.**



The election was necessitated following the demise of DMK legislator N Pugalenthi who had won against AIADMK candidate Muthamilselvan by a margin of around 9,500 votes in the 2021 assembly polls. Since the AIADMK decided to refrain from contesting the bypoll, NTK chief Seeman and PMK leaders Ramadoss and Anbumani Ramadoss fought hard to garner the AIADMK votes.

Seeman even backed the hunger stir by Edappadi K Palaniswami and AIADMK MLAs in Chennai over the Kallakurichi hooch tragedy. Anbumani also appealed to the AIADMK voters to help defeat the ruling party. However, BJP State chief K Annamalai, campaigning for PMK ridiculed EPS for running away from the election. "EPS has asked the cadre not to vote for PMK. The message is not to boost its voting percentage and improve its bargaining power for the forthcoming assembly elections," said an AIADMK functionary.

Dt. Next, Dated: 04.07.2024

## Sharad-led NCP can accept donations: EC



NEW DELHI: The Election Commission on Monday allowed the Nationalist Congress Party-Sharadchandra Pawar to accept donations keeping in mind the forthcoming assembly polls in Maharashtra. Following a request from the party, the EC has authorised the party to "accept any amount of contribution voluntarily offered to it by any person or company other than a government company" under the relevant sections of the Representation of the People Act, 1951. ▸More on P7

# Sharad faction gets EC nod to accept donations

**NEW DELHI: The Election Commission on Monday allowed the Nationalist Congress Party-Sharadchandra Pawar to accept donations keeping in mind the forthcoming assembly polls in Maharashtra.**

The Sharad Pawar-led outfit had requested the commission to certify the status of the party for it to accept voluntary contributions from the public.

The poll panel has authorised the party to "accept any amount of contribution voluntarily offered to it by any person or company other than a government company" under the relevant sections of the Representation of the People Act, 1951, which govern the contribution to all political parties.

**Authorisation to accept donations will be applicable till the final disposal of the petition in the Supreme Court against the EC decision**

An eight-member delegation of the NCP-SP party led by its working president Supriya Sule met the commission on Monday.

In July last year, Ajit Pawar led a rebellion against his uncle Sharad Pawar and claimed the symbol as well as the party name Nationalist Congress Party, citing the support of over two-thirds of the outfit's legislators in the Maharashtra assembly.

The Election Commission upheld his claim and asked the Sharad Pawar-led faction to pick a new name as an interim measure in view of the Lok Sabha elections.

The authorisation to the NCP-SP to accept donations will be applicable till the final disposal of the petition in the Supreme Court against the Election Commission decision. The Sharad Pawar-led NCP-SP contested 10 Lok Sabha seats in Maharashtra and won eight, while Ajit Pawar's NCP contested five seats and managed to win just one.

The Hindu (Tamil)
Dated: 09.07.2024

### இடைத்தேர்தல் பிரச்சாரம் ஓய்ந்தது

# விக்கிரவாண்டியில் நாளை வாக்குப்பதிவு

**• சிறப்பு போலீஸார், துணை ராணுவத்தினர் உட்பட 3 ஆயிரம் பேர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.**

• விழுப்புரம்

விக்கிரவாண்டி சட்டப்பேரவை இடைத்தேர்தல் பிரச்சாரம் நேற்று மாலையுடன் ஓய்ந்தது. நாளை வாக்குப்பதிவு நடைபெறுகிறது. தேர்தல் ஆணைய உத்தரவை தொடர்ந்து, தொகுதிக்குள் இருந்த வெளிநபர்கள் வெளியேறினர்.

விக்கிரவாண்டி தொகுதியின் திமுக எம்எல்ஏ புகழேந்தி கடந்த ஏப்ரல் 6-ம் தேதி உடல்நலக் குறைவால் காலமானார். இதையடுத்து, இத்தொகுதிக்கு ஜூலை 10-ம் தேதி இடைத்தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்தது.

பிரதான எதிர்க்கட்சியான அதிமுக, இடைத்தேர்தலில் போட்டியிடவில்லை என்று அறிவித்ததை தொடர்ந்து திமுக, பாமக, நாம் தமிழர் கட்சி என மும்முனை போட்டி நிலவுகிறது. மொத்தம் 29 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

கடந்த 10 நாட்களுக்கும் மேலாக திமுக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து அமைச்சர்கள் கே.என். நேரு, பொன்முடி, செஞ்சி மஸ்தான், சி.வி.கணேசன் உள்ளிட்டோர் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வந்தனர்.

தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் களம்காணும் பாமக வேட்பாளர் சி.அன்புமணியை ஆதரித்து கட்சியின் நிறுவனர் ராமதாஸ், கட்சித் தலைவர் அன்புமணி, முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை, அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன், தமிழக மக்கள் முன்னேற்ற கழக நிறுவனர் ஜான் பாண்டியன், ஐஜேக தலைவர் ரவி பச்சமுத்து உள்ளிட்டோர் பிரச்சாரம் மேற்கொண்டனர்.

தனித்து களம்காணும் நாம் தமிழர் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் அபிநயாவை ஆதரித்து, அதன் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

இந்நிலையில், விறுவிறுப்பாக நடந்த பிரச்சாரம் நேற்று மாலை 6 மணியுடன் ஓய்ந்தது. நேற்று நிறைவு நாள் என்பதால் பிரச்சாரக் களம் பரபரப்பாக காணப்பட்டது. தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்ட அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், விக்கிரவாண்டி வட்டாட்சியர் அலுவலகம் எதிரே நடந்த பொதுக் கூட்டத்திலும், பாமக தலைவர் அன்புமணி, கெடாரிலும், நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், ஓரத்தூரிலும் பிரச்சாரத்தை நிறைவு செய்தனர்.

விக்கிரவாண்டி தொகுதி வாக்காளர்கள் அல்லாதவர்கள் மாலை 6 மணிக்கு மேல் தொகுதிக்குள் இருக்க கூடாது. வெளிநபர்கள் அனைவரும் தொகுதியைவிட்டு வெளியேற வேண்டும் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு ஏற்கெனவே அறிவித்திருந்தார். இதற்கான உத்தரவை மாவட்ட தேர்தல் அலுவலர் பழனியும் பிறப்பித்தார். அதனால், விடுதிகள், திருமண மண்டபங்களில் வெளிநபர்கள் தங்கி உள்ளனரா என தீவிர சோதனை நடத்தப்பட்டது.

விக்கிரவாண்டி தொகுதியில் 1,16,962 ஆண் வாக்காளர்கள், 1,20,040 பெண் வாக்காளர்கள், 29 இதர பாலினத்தவர் என மொத்தம் 2,37,031 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். நாளை காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கி மாலை 6 மணி வரை நடக்கிறது. வாக்கு எண்ணிக்கை 13-ம் தேதி நடைபெற உள்ளது.

இடைத்தேர்தலுக்காக 138 மையங்களில், 276 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் பனையபுரம், குண்டலபுலியூர், ராதாபுரம் கிராமங்களில் உள்ள வாக்குச்சாவடி மையங்கள் மிக பதற்றமானவை என கண்டறிப்பட்டுள்ளன. மேலும் பதற்றமானதாக 42 வாக்குச்சாவடிகள் கண்டறியப்பட்டுள்ளன. இங்கு கூடுதல் பாதுகாப்புக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வடக்கு மண்டல ஐ.ஜி. நரேந்திர நாயர் மேற்பார்வையில் டிஐஜி திஷா மிட்டல் தலைமையில் 3 எஸ்.பி.க்களின் கண்காணிப்பில் 700 சிறப்பு காவல் படையினர், 220 துணை ராணுவத்தினர் உட்பட 3 ஆயிரம் போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இன்று காலை முதல், விழுப்புரம் ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து, அந்தந்த வாக்குப்பதிவு மையங்களுக்கு போலீஸ் பாதுகாப்புடன் வாக்குப்பதிவு இயந்திரங்கள் எடுத்துச் செல்லப்பட உள்ளன.

நேற்று முதல் நாளை வரை 3 நாட்களுக்கும், வாக்கு எண்ணிக்கை நடைபெறும் தினமான ஜூலை 13-ம் தேதியும் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து டாஸ்மாக் கடைகளுக்கும் விடுமுறை விடப்பட்டுள்ளது.



↑ விக்கிரவாண்டி தொகுதியில் நாளை வாக்குப்பதிவு நடைபெற உள்ள நிலையில், வாக்குச்சாவடிகளுக்கு தேவையான எழுதுபொருட்கள், அடையாள அட்டை உள்ளிட்டவற்றை தயார்படுத்தும் பெண் ஊழியர்கள். படம்: எஸ்.எஸ்.குமார்

Campaign ends for Vikravandi By election polling starts tomorrow Three thousand Special police & para military used for bandobast.

The Hindu (Tamil)
Dated: 09.07.2024

### விக்கிரவாண்டி இடைத்தேர்தலில்

# வாக்காளர்களுக்கு பணம் விநியோகமா?

**▶ கிராம மக்களின் குற்றச்சாட்டால் சர்ச்சை**

எஸ்.நீலவண்ணன்

● விழுப்புரம்

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் வாக்காளர்களுக்கு பரவலாக பணம் விநியோகம் செய்யப்பட்டதாக சர்ச்சை எழுந்துள்ளது. இதில், சில கிராமங்களில், ஆளும் தரப்பினர் தங்கள் பகுதிக்கு மட்டும் பணம் வழங்கவில்லை என்று குற்றச்சாட்டும் தெரிவித்து வருகின்றனர்.

விக்கிரவாண்டி இடைத்தேர்தல் நாளை நடைபெறுகிறது. இந்த தேர்தலில் திமுக, பாமக, நாம் தமிழர் கட்சி என மும்முனைப் போட்டி நிலவுகிறது.

திமுக வேட்பாளர் அன்னியூர் சிவாவுக்கு ஆதரவாக 25 அமைச்சர்கள், 100-க்கும் மேற்பட்ட எம்எல்ஏக்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் என 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இத்தொகுதியில் உள்ள கிராமங்களில் தங்கி தேர்தல் பணியாற்றி வருகின்றனர்.

திமுக தரப்பில், கடந்த வாரம் வாக்காளர்களுக்கு முதல் தவணையாக ரூ.1,000 வழங்கப்பட்டதாக சர்ச்சை எழுந்தது. இந்நிலையில், 2-வது தவணையாக நேற்று முன்தினம் முதல் மேலும், ரூ.1,000 வழங்கப்பட்டு வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதற்கிடையே விக்கிரவாண்டி தொகுதிக்கு உட்பட்ட பனமலை, வெள்ளையாம்பட்டு, ஏழுசெம்பொன் உள்ளிட்ட கிராமங்களில் குறிப்பாக பாமக வலுவாக உள்ள கிராமங்களில், பாமகவினர் தவிர மற்றவர்களுக்கு திமுகவினர் பணம் வழங்கியதாக அப்பகுதி மக்கள், குறிப்பாக பெண்கள் குற்றம்சாட்டி வருகின்றனர். இதுதொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகப் பரவி, சர்ச்சையை கிளப்பியது.

இதுகுறித்து இறுதி கட்டப் பணியில் மும்முரமாக இருந்த, திமுக வெளியூர் நிர்வாகிகள் சிலரிடம் கேட்டபோது, 'பண விநியோகம் எதுவும் நடைபெறவில்லை' என்று மறுத்தனர். இருப்பினும், பெயர் கூற விரும்பாத நிர்வாகிகள் சிலர் கூறியதாவது:

வாக்காளர்களுக்கு 100 சதவீதம் இத்தொகையை முழுமையாக வழங்க வேண்டும் என்றே கட்சித் தலைமை உத்தரவிட்டுள்ளது. பல இடங்களில் 100 சதவீதம் தொகையைப் பெற்று விடுவார்கள். சில கிராமங்களில், 'தேர்தலுக்குப் பணம்பெறவேண்டாம்' என்றுவெகு சிலர் நினைக்கக்கூடும். அவர்களை தவிர்த்து, அந்தப் பகுதியிலும் 80 சதவீதம் வரை விநியோகம் இருக்க வேண்டும் என்று தலைமை அறிவுறுத்தி உள்ளது. அதன்படியே விநியோகம் செய்கிறோம்.

நாங்கள் வெளியூர்காரர்கள்; அந்தந்த கிராமத்தில் உள்ள கட்சிக்காரர்களை வைத்துதான் பணம் வழங்கப்படுகிறது. 'பண விநியோகத்தில் பாரபட்சம்' என்ற கிராம மக்களின் குற்றச்சாட்டு ஏற்புடையதல்ல. இவ்வாறு அவர்கள் கூறினர்.

விக்கிரவாண்டி தொகுதிக்கு நாளை தேர்தல் நடைபெற உள்ள சூழலில், வாக்காளர்களுக்கு பண விநியோகம் செய்ததாக கூறப்படுவது சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறது.

### பணம் கொடுப்பதும் குற்றம்; பெறுவதும் குற்றம்

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951–ன் பிரிவு 123(1) 6 மற்றும் இந்திய தண்டனைச் சட்டம் 7–ன் 171–பி மற்றும் 171–இ பிரிவுகள் லஞ்சத்தை ஊழல் நடவடிக்கையாக குறிப்பிடுகிறது.

'லஞ்சம்' என்பது தேர்தல் நடவடிக்கைகளை பாதிக்கும் ஒன்றாக கருதப்படுகிறது. லஞ்சம் கொடுப்பவர் மற்றும் ஏற்றுக்கொள்பவர் இருவர் மீதும், இது குற்றச்செயலாக கருதப்படுகிறது. இதற்காக ஒரு வருட சிறைத்தண்டனை, அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும் என தேர்தல் ஆணையத்தால் வரையறுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

Controversy due to allegations of villagers in Vikravandi byelections regarding distribution of money to voters.

Daily Thanthi
Dated: 09.07.2024



வாக்குச்சாவ்டி மையங்களுக்கு தேவையான பொருட்கள் விக்கிரவாண்டி தாலுகா அலுவலகத்தில் இருந்து அனுப்பி வைப்பதற்காக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள காட்சி.

### விக்கிரவாண்டியில் நாளை வாக்குப்பதிவு:

# அனல்பறந்த பிரசாரம் ஓய்ந்தது

## 2 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு

விழுப்புரம், ஜூலை.9-

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் அனல்பறந்த தேர்தல் பிரசாரம் நேற்று மாலையுடன் ஓய்ந்தது. நாளை (புதன்கிழமை) வாக்குப்பதிவு நடைபெற உள்ள நிலையில், 2 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

### 29 வேட்பாளர்கள் போட்டி

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி தொகுதி தி.மு.க. எம்.எல்.ஏ. புகழேந்தி கடந்த ஏப்ரல் மாதம் 6-ந்தேதி மரணம் அடைந்தார். இதையடுத்து, இந்த தொகுதிக்கு நாளை வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இடைத்தேர்தல் போட்டியில் 29 வேட்பாளர்கள் களத்தில் இருக்கிறார்கள். ஆனாலும், ஆளும் கட்சியான தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவா, தேசிய ஜனநாயக கூட்டணியில் பா.ம.க. சார்பாக சி.அன்புமணி, நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர் டாக்டர் அபிநயா ஆகியோர் இடையேதான் மும்முனை போட்டி நிலவுகிறது.

### முகாமிட்ட தலைவர்கள்

தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் வலைத்தளத்தில் வீடியோ பதிவு வெளியிட்டு பிரசாரம் செய்தார். மேலும் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் முகாமிட்டு பிரசாரத்தில் ஈடுபட்டனர். தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் வலைத்தளத்தில் வீடியோ பதிவு வெளியிட்டு பிரசாரம் செய்தார். பா.ம.க.வை பொறுத்தவரை அதன் தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ், நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ஆகியோர் தொகுதியிலேயே முகாமிட்டு தினசரி வாக்காளர்களை சந்தித்து ஆதரவு திரட்டினார்கள்.

அதேபோன்று தி.மு.க. அங்கம் வகிக்கும் இந்தியா கூட்டணியில் தமிழகத்தில் இடம்பெற்றுள்ள கட்சிகளின் தலைவர்களும், பா.ம.க.வுக்கு தேசிய ஜனநாயக கூட்டணியில் உள்ள கட்சிகளின் தலைவர்களும் தொகுதியில் தீவிர ஓட்டுவேட்டை நடத்தினர்.

### பிரசாரம் ஓய்ந்தது

அதேவேளை தமிழக சட்டசபையில் பிரதான எதிர்க்கட்சியாக உள்ள அ.தி.மு.க. இடைத்தேர்தலை புறக்கணித்தது. இதனால் அவர்களது வாக்குவங்கியை பெறுவதில் பா.ம.க., நாம் தமிழர் கட்சியும் மல்லுக்கட்டுகிறார்கள்.

இதனால் இடைத்தேர்தல் களம் வழக்கத்தை விட மாறுபட்டு, தேர்தல் பிரசாரம் அனல் பறந்தது. தேர்தல் விதிமுறைப்படி வாக்குப்பதிவு நிறைவடையும் நேரத்தில் 48 மணி நேரத்துக்கு முன்பாக தேர்தல் பிரசாரத்தை முடித்துக்கொள்ள வேண்டும். அதன்படி நேற்று மாலை 6 மணியுடன் தொகுதியில் பிரசாரம் ஓய்ந்தது.

### இறுதிக்கட்ட பிரசாரம்

நேற்றைய இறுதிக்கட்ட பிரசாரத்தில் ஈடுபட்ட அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தும்பூர், நேமூரில் வாக்காளர்களை சந்தித்து உதய சூரியன் சின்னத்துக்கு ஆதரவு திரட்டினார். மாலையில் விக்கிரவாண்டி பேரூராட்சியில் தனது பிரசாரத்தை முடித்தார்.

அதேபோல் பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ், கெடாரில் முடித்துக்கொண்டார். இதேபோல் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ஒரத்தூரில் பிரசாரத்தை நிறைவு செய்தார்.

இதையடுத்து தொகுதிக்கு தொடர்பில்லாத வெளியூரை சேர்ந்த அரசியல் கட்சி பிரமுகர்கள், தேர்தல் ஆணையத்தின் உத்தரவுக்கிணங்க அங்கிருந்து வெளியேறினார்கள்.

### நாளை வாக்குப்பதிவு

பிரசாரம் ஓய்ந்த நிலையில் நாளை (புதன்கிழமை) காலை வாக்குப்பதிவு தொடங்குகிறது. இதற்காக வாக்குச்சாவடிகள் மும்முரமாக தயார்படுத்தப்பட்டுள்ளன.

மொத்தம் 276 வாக்குச்சாவடிகளில் நடைபெறும் வாக்குப்பதிவில் 2 லட்சத்து 37 ஆயிரத்து 31 வாக்காளர்கள் வாக்களிக்க இருக்கிறார்கள்.

இந்த தேர்தலில் 552 மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களும், கட்டுப்பாட்டு கருவிகள் 276-ம், வி.வி.பேட் கருவிகள் 276-ம் ஆக மொத்தம் 1,104 எண்ணிக்கையிலான எந்திரங்கள் பயன்படுத்தப்பட உள்ளன. தேர்தல் பணியில் அரசு அலுவலர்கள், ஊழியர்கள் என 1,355 பேர் ஈடுபட இருக்கிறார்கள்.

### 2 ஆயிரம் போலீசார்

இத்தொகுதியில் பதற்றம் நிறைந்த, மிகவும் பதற்றம் நிறைந்த வாக்குச்சாவடிகளாக 44 வாக்குச்சாவடிகள் கண்டறியப்பட்டு உள்ளன.

மேலும் தேர்தலுக்கு இன்று ஒரு நாளே இருப்பதால் பணப்பட்டுவாடாவை முற்றிலும் தடுக்க பறக்கும் படையினர் தீவிர வாகன சோதனை நடத்தி வருகின்றனர்.

தேர்தல் அமைதியாகவும், பாதுகாப்பாகவும் நடைபெற 2 ஆயிரம் போலீசார் பலத்த பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

### வாக்கு எண்ணிக்கை

நாளை காலை 7 மணிக்கு தொடங்கும் வாக்குப்பதிவு மாலை 6 மணிக்கு நிறைவு பெறுகிறது.

பின்னர் வாக்கு எண்ணிக்கை 13-ந் தேதி (சனிக்கிழமை) பனையபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

Campaign ends for vikravandi Byelections polling starts tomorrow Three thousand special police & paramilitary are for bandobust.

Daily Thanthi

Dated: 09.07.2024

# தி.மு.க. பிரதிநிதி வீட்டில் பதுக்கிய சில்வர் டிபன் பாக்ஸ்கள்

## பா.ம.க.வினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு

விழுப்புரம், ஜூலை.9-

விக்கிரவாண்டி இடைத்தேர்தல் நாளை (புதன்கிழமை) நடைபெற உள்ளது. இதற்கான இறுதிக்கட்ட பிரசாரம் நேற்றுடன் முடிவடைந்தது.

இந்த நிலையில் விக்கிரவாண்டி அடுத்த வி.சாத்தனூரில் உள்ள தி.மு.க. கிளை பிரதிநிதி வீட்டில் வாக்காளர்களுக்கு வழங்குவதற்காக சில்வர் டிபன் பாக்ஸ்கள் பதுக்கி வைத்திருப்பதாக பா.ம.க.வினருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து பா.ம.க.வினர் தி.மு.க. பிரதிநிதி வீட்டிற்கு சென்று, அங்கிருந்த 810 டிபன் பாக்ஸ்களை பறிமுதல் செய்தனர். இதுபற்றி அறிந்ததும் பா.ம.க. மேட்டூர் எம்.எல்.ஏ. சதாசிவம் தலைமையில் கட்சி நிர்வாகிகள் அப்பகுதிக்கு திரண்டு தி.மு.க.வை கண்டித்து வி.சாத்தனூர் மந்தக்கரை பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தகவல் அறிந்து வந்த விக்கிரவாண்டி போலீசார் அவர்களை சமாதானப்படுத்தினர். இதையடுத்து பறிமுதல் செய்த டிபன் பாக்ஸ்களை தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரான சந்திரசேகரிடம் பா.ம.க.வினர் ஒப்படைத்தனர். இருப்பினும் இந்த சம்பவத்தால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

Silver tiffin boxes kept at DMK representative house

PMK Demonstration at Vikravandi A.C

Daily Thanthi

Dated: 09.07.2024

# விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் தி.மு.க.வுக்கு வெற்றி வாய்ப்பு

## மக்கள் ஆய்வகம் கருத்து கணிப்பில் தகவல்

சென்னை, ஜூலை.9-

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் தி.மு.க.வுக்கு வெற்றி வாய்ப்பு இருப்பதாகவும், அ.தி.மு.க. வாக்குகள் பெரும்பாலும் பா.ம.க.வுக்கு செல்ல வாய்ப்புகள் இருப்பதாகவும் மக்கள் ஆய்வகம் நடத்திய கருத்துக்கணிப்பில் தெரியவந்துள்ளது.

**விக்கிரவாண்டி இடைத்தேர்தல்**

விக்கிரவாண்டி இடைத்தேர்தல் குறித்து மக்கள் ஆய்வகம் நடத்திய கருத்துக்கணிப்பு குறித்து, அமைப்பின் இயக்குனர் எஸ்.ராஜநாயகம் சென்னையில் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:-

விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தல் குறித்து மக்கள் ஆய்வகத்தின் மூலமாக நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் தி.மு.க. 56.6 சதவீதமும், பா.ம.க. 37.5 சதவீதமும், நாம் தமிழர் கட்சி 4 சதவீதமும், பிற வேட்பாளர்கள் 0.4 சதவீதமும் ஓட்டுகள் பெறுவார்கள் என்றும் தெரியவருகிறது. அ.தி.மு.க. தேர்தலை புறக்கணித்துள்ள நிலையில், அக்கட்சிக்கான வாக்குகளில் பெரும்பாலானவை பா.ம.க.வுக்கு செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்தவகையில் அ.தி.மு.க. வாக்குகளில் பா.ம.க.வுக்கு 52.2 சதவீதமும், தி.மு.க.வுக்கு 37.3 சதவீதமும், நாம் தமிழர் கட்சிக்கு 6 சதவீதமும், பிற வேட்பாளர்களுக்கு 1.5 சதவீதமும் பிரியலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**தி.மு.க.வுக்கு வெற்றி நிச்சயம்**

அதேபோல 2026-ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் ஆட்சியமைக்கும் கட்சி குறித்த யூகமாக தி.மு.க.வுக்கு 42.6 சதவீதம் பேரும், பா.ம.க.வுக்கு 20.2 சதவீதம் பேரும், அ.தி.மு.க.வுக்கு 19.5 சதவீதம் பேரும், தமிழக வெற்றிக் கழகத்துக்கு 10.7 சதவீதம் பேரும், நாம் தமிழர் கட்சிக்கு 4.4 சதவீதம் பேரும் ஆதரவளித்துள்ளனர்.

அடுத்த முதல்-அமைச்சர் குறித்த யூகத்துக்கு மு.க.ஸ்டாலினுக்கு ஆதரவாக 41.5 சதவீதம் பேரும், அன்புமணி ராமதாசுக்கு 20.6 சதவீதம் பேரும், எடப்பாடி பழனிசாமிக்கு 19.5 சதவீதம் பேரும், விஜய்க்கு 11.8 சதவீதம் பேரும், சீமானுக்கு 4 சதவீதம் பேரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

அதேபோல பணம், பரிசு தரும் எல்லா வேட்பாளர்களிடமும் வாங்கிக்கொள்வேன் என்று 85.5 சதவீதம் பேரும், ஏதேனும் ஒரு வேட்பாளரிடம் இருந்து மட்டும் பெற்றுக்கொள்வேன் என்று 13.2 பேரும் தெரிவித்துள்ளனர். பணம் வாங்கிய கட்சிக்கே வாக்களிக்கவேண்டிய அவசியமில்லை என்று 72.4 சதவீதம் பேர் தெரிவித்துள்ளனர். தி.மு.க. வேட்பாளரின் வெற்றி நிச்சயம் என்று தெரியவருகிறது.

இவ்வாறு அவர் கூறினார். பேட்டியின்போது மக்கள் ஆய்வகத்தின் துணை இயக்குனர் சிறுமலர் ஜெகன் உடனிருந்தார்.

News regarding people's Lab poll DMK's chances of winning in vikravandi by elections.

Dinamalar

Dated: 09.07.2024

# விக்கிரவாண்டியில் பிரசாரம் நிறைவு வெளியேறிய தமிழக அமைச்சர்கள்

**விக்கிரவாண்டி, ஜூலை 9–**

இடைத்தேர்தல் நடைபெறவுள்ள விக்கிரவாண்டி தொகுதியில், இறுதிகட்ட பிரசாரம் நேற்று மாலையுடன் நிறைவடைந்தது.

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி தொகுதி எம்.எல்.ஏ., புகழேந்தி, ஏப்ரல் 6ல் உடல்நலக் குறைவால் இறந்ததால், நாளை 10ம் தேதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளது.

தொகுதியில், 29 வேட்பாளர்கள் களத்தில் இருந்த போதிலும், தி.மு.க., – பா.ம.க., மற்றும் நாம் தமிழர் கட்சிகளிடையே மும்முனை போட்டி நிலவி வருகிறது.

தொகுதியில் உள்ள 2 லட்சத்து 34,178 வாக்காளர்கள் ஓட்டு போட வசதியாக, 276 ஓட்டுச்சாவடிகள் அமைக்கப்பட்டு உள்ளது.

கடந்த 14ம் தேதி துவங்கிய தேர்தல் பிரசாரம் நேற்று மாலை முடிவுற்றது. தி.மு.க., வேட்பாளர் சிவாவை ஆதரித்து அமைச்சர் உதயநிதி பிரசாரம் செய்து, மாலை 5:50 மணிக்கு விக்கிரவாண்டியில் நிறைவு செய்தார்.

பா.ம.க., வேட்பாளர் அன்புமணியை ஆதரித்து அக்கட்சியின் மாநில தலைவர் அன்புமணி கெடாரில் பிரசாரம் செய்து, அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து பிரசாரத்தை நிறைவு செய்தார்.

நாம் தமிழர் கட்சி வேட்பாளர் அபிநயாவை ஆதரித்து அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான், ஒரத்துாரில் தன் பிரசாரத்தை நிறைவு செய்தார்.

தொகுதியில், 25 நாட்களாக முகாமிட்டு பிரசாரம் மேற்கொண்டு வந்த அமைச்சர்கள், எம்.பி.,க்கள், எம்.எல்.ஏ.,க்கள் உள்ளிட்ட வெளி மாவட்ட அரசியல்கட்சியினர் நேற்று மாலை 6:00 மணிக்கு பின் தொகுதியில் இருந்து வெளியேறினர்.

Ministers of Tamil Nadu left after campaigning ends in Vikrawandi A.C